நாள்: 05.10.2023

OS No. 25/2015

வா.சா. 2- குமார்

சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்திய பிரமாணத்தின் பேரின் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

1. நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்டியம் அளிக்கவரவில்லை என்றால் சரிதான். சுந்தர்ராஜன் கேட்டு கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எனது ஊர் எதுவென கேட்டால் அம்மாபேட்டையாகும். நான் தற்போது புதுப்பேட்டை சிவாலய கார்டன்ஸ் பகுதியில் வீடு கட்டி வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். வாதி பிரதிவாதிகள் மீது எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியும். வாதி பிரதிவாதிகளுடன் ஏற்படுத்திக் கொண்ட விற்கிரைய ஒப்பந்தம் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் என்ன எதிர்நிலைபாடு எடுத்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்று கேட்டால் கிரைய ஒப்பந்தம் சம்மந்தமாக அட்வான்ஸ் முழு தொகை வாங்கி விபரம் தெரியும். எனக்கு என்ன தொழில் என்று கேட்டால். நிலதரகு செய்து கொண்டிருகிறேன். இதற்கு முன்பாக கோவில் வேலை செய்து வந்தேன்.

2. நான் இதற்கு முன்பு வட்டி தொழில் செய்து வந்தேன் என்றும், அந்த சமயத்தில் செந்தில் 2ம் பிரதிவாதி கடன் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி என்னிடம் வாங்கிய கடனுக்காக தான் தாவா கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையொப்பமிட்டு அச்சமயத்தில் 2ம் பிரதிவாதி வசம் 20,000 ரூபாய் ஒப்படைத்துவிட்டு மீது தொகை நான் வாங்கி சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து விற்கிரைய ஒப்பந்த காலத்தில் யார் பெயரில் இருந்தது என்று கேட்டால் நரசம்மா பெயரில் இருந்தது. நரசம்மாவுக்கு 2ம் பிரதிவாதி போக இன்னும் 3 மகன் உள்ளார்கள் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி வாங்கிய கடனுக்காக 1ம் பிரதிவாதி வசம் விற்கிரைய ஒப்பந்தம் எழுதி வாங்கியது தவறு என்று சொன்னால் சரியல்ல. வாதி சுந்தர்ராஜன் என்ன தொழில் செய்கிறார் என்றால் விவசாயம் செய்கிறார். வாதி விவசாயம் செய்யவில்லை செங்கல் வியாபாரம் செய்கிறார் என்று சொன்னால் சரியல்ல.

3. நான் எந்த தேதியில் தாவா கிரைய ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டேன் என்றால் 21.02.2014 ஆகும். வா.சா.ஆ.1ல் உள்ள ஆவணத்தில் உள்ள சாட்சி கையெத்துகளில் 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். 1வது சாட்சி கையெழுந்து சண்முகம் என்பவரால் போடப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் புதுப்பேட்டை, கணேசன் பத்திர எழுத்தரால் தயாரிக்கப்பட்டது. வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்பட்ட வா.சா.ஆ.1 ஒப்பந்தத்திற்கு பின்பு அவர்கள் இருவருக்கு இடையே ஒப்பந்தம் சம்மந்தமாக என்ன நடைபெற்றது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் அந்த விபரம் எனக்கு தெரியும்.

4. வா.சா.ஆ.1 ஒப்பந்தம் சம்மந்தமாக, பிரதிவாதிகள் வசம் எந்த தேதியில் நான் ஒப்பந்தம் சம்மந்தமாக பேசினேன் என கேட்டால், நான் ஒரு முறை நேரடியாக பிரதிவாதிகளை கேட்டேன். வாதியுடனும் ஒருமுறை சென்று கேட்டேன். வா.சா.ஆ.1 ஒப்பந்தம் சம்மந்தமாக எனக்கு முழுமையாக தெரியாது என்று சொன்னாலும், வழக்கிற்காக விபரங்கள் தெரியும் என்று சொன்னால் சரியல்ல.

5. இந்த சுற்றுவட்டாரத்தில் கடன் பணம் பறிமாற்றத்தில் கடன் தொகைக்கு 2 மடங்காக கடனுறுதிச் சீட்டு எழுதுவதும் விற்கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொள்வது வட்டார வழக்காக உள்ளது என்று சொன்னால் சரிதான். 2ம் பிரதிவாதி செந்தில்குமார் வாதி சுந்தர்ராஜன் வசம் 50 ஆயிரம் கடன் தொகை பெற்றுக்கொண்டு அதில் 30 ஆயிரத்தை உங்களிடம் கொடுத்துவிட்டு 20 ஆயிரம் அவர் பெற்றுக் கொண்டதற்கான ஏற்பாடுதான் வா.சா.ஆ.1 என்ற ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த சொத்தை தவிர வேறு சொத்துகள் பிரதிவாதிகளுக்கு இல்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கான அவசியம் ஏற்படவில்லை என்று சொன்னால் அவர்கள் தான் விற்கிரையம் செய்ய முன்வந்தார்கள். தாவா கிரைய ஒப்பந்த சொத்து என்பது பலலட்சம் ரூபாய் மதிப்பில் உள்ளது என்றும், வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தின் படி குறைவான விலைக்கு விற்கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி செந்தில்குமார் தாம் பெற்ற 50 ஆயிரம் கடன் தொகையினை 12 சதவீத வட்டியுடன் செலுத்த தற்போதுவரை தயாராக உள்ளார் என்றும், வாதி அதிக வட்டி கோரி இவ்வழக்கினை நடத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

6. கடன் தொகைக்காக ஏற்படுத்தப்பட்ட விற்கிரைய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையொப்பமிட்டுவிட்டு வாதிக்கு ஆதாரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.